DINAKARAN

15 JUNE 2023

PAGE 14

# புதுவை பல்கலையில் ‘ரசாயன அறிவியல்’ இதழ் வெளியீடு



**புதுச்சேரி, ஜூன் 15:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுவை பல்கலைக்கழகத்தின் வேதியியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் பக்ததாஸ் மற்றும் அவரது ஆராய்ச்சிக் குழு *C-H* ஆக்டிவேசன் வினைகளில் ஒரு திருப்புமுனை ஆராய்ச்சியை வேதியியல் துறையில் ஏற்படுத்தியுள்ளனர். இதற்கு முன்பு யாரும் பயன்படுத்தாத செயல்முறையை *C-H* ஆக்டிவேசன் வினைகளில், பல்லேடியம்-வினையூக்கியை உபயோகித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பதிலீடு செய்யப்பட்ட சின்னமேட்டுகள் மற்றும் அவற்றின் ஹெட்டிரோசைக்ளிக் ஒப்புமைகளை, பல்வேறு வகையான அல்கீன்களுடன் வினை புரியா நிலையிலுள்ள *C-H* பிணைப்புகளை நைட்ரைல் இயக்கும் குழுவினை பயன்படுத்தி புதிய சேர்மங்களை உருவாக்கியுள்ளனர். மேலும் இந்த ஆய்வானது லண்டனில் உள்ள ராயல் சொசைட்டி ஆஃப் கெமிஸ்ட்ரியால் வெளியிடப்படும் முதன்மை இதழான 9.969 தாக்கக் காரணி *(impact factor)* மதிப்பைக் கொண்ட ரசாயன அறிவியல் *(Chemical Science)*\" இதழில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் உயர்தர ஆராய்ச்சியின் தனித்தன்மையை உணர்ந்து லண்டனில் உள்ள ராயல் சொசைட்டி ஆஃப் கெமிஸ்ட்ரியானது, அதன் முதன்மை இதழான “ரசாயன அறிவியல்” என்ற இதழின் முன் அட்டை பக்கத்தில் வெளியிட்டுள்ளது. இந்த அட்டைப் படத்தில் பல்வகையான பதிலீடு செய்யப்பட்ட சின்னமேட் சேர்மங்களும், அதன் வினைபடு பொருளும் ஆரோவில் மாத்ரி மந்திரியின் பின்புலத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் புதுவைப் பல்கலைக்கழகமும், புதுச்சேரியும் உலகளவில் பெருமைபடுத்தப்பட்டுள்ளது. இந்த மிகப்பெரிய சாதனையை பாராட்டும் விதமாக புதுவைப் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் மற்றும் கல்வி இயக்குநர் பேராசிரியர் தரணிக்கரசு ஆகியோர் சாதனைப் படைத்த பேராசிரியர் பக்ததாஸ் மற்றும் அவரது குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.